மலர் 2 இதழ் 1 ஜூலை, 2017 ISSN : 2454-3993

# ஐந்திணைக் குடிகளின் நம்பிக்கைகள்

ந. வெண்ணிலா
முனைவர் பட்ட ஆய்வாளர்
கிருஷ்ணசாமி மகளிர் அறிவியல் கலை மற்றும் மேலாண்மையியல் கல்லூரி
கடலூர்

மனித இனத்தைப் பற்றிய ஆய்வே மானுடவியலாகும். மானுடவியல் பரிணாம வளர்ச்சி முதல் பிற விலங்கினத்திலிருந்து மனிதர்களைத் தெளிவாக வேறுபடுத்துகின்ற சமுதாயப் பண்பாட்டுத் தனிச்சிறப்புகள் வரை மனிதர்கள் தோடர்பான பல்வேறு அம்சங்கள் குறித்து ஆராய்கின்றது. மானுடவியல், 20 ஆம் நூற்றாண்டின் செய்திகளைத் தன்னகத்தே கொண்டுள்ளமையால் துறைகளின் தொகுப்பாக மாறிவிட்டது.

உயிரியல், மானுடப் பரிணாம வளர்ச்சி ஆகியவற்றில் கவனத்தைச் செலுத்துகின்ற பிரிவுகள் பண்பாட்டு மானுடவியல், மொழி சார்ந்து மானுடவியல், உளவியல் மானுடவியல் என அறியப்படுகின்றன. வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட மனிதனின் சமூக வாழ்க்கையை ஆரர்கின்ற தொல்பொருளியல், மனிதப் பண்பாடு அதன் மூலக்கூறுகள், அமைப்பு, மாற்றங்கள் போன்றவற்றை ஆராய்வது பண்பாட்டு மானுடவியல் அல்லது சமூக மானுடவியல் (Cultural or Social Anthrophology) ஆகும். மானுடவியல் எழுத்தறிவுக்கு முற்பட்ட மக்களுடைய பண்பாட்டையும் ஆராய்கின்றது.

மனிதனுக்கு இருவகையான பாரம்பரியம் உண்டு. ஒன்று உயிரியல் பாரம்பரியம், மற்றொன்று சமூகப் பாரம்பரியம். சமூகப் பண்பாட்டு மானுடவியலில் மனிதனின் வாழிடம் கால்வழி, தொழில், சமூக அமைப்பு, இரத்த உறவு முறை, தனிமனித வாழ்வின் படிகளான பிறப்பு, பூப்பு, திருமணம், இறப்பு போன்றன அங்கியுள்ளன. சமூக வாழ்வில் பெரும்பங்கு வகிப்பது குடும்பம், சொத்துரிமை, சமயம், சடங்குகள், நம்பிக்கைகள் போன்றவை ஆராயப்படுகின்றன. மானுடவியலார் இனத்தின் பண்பாட்டினை ஆராயும் போது அவ்வின மக்களிடையே காணக்கிடக்கும் பழக்கவழக்கங்கள், சடங்குகள், நம்பிக்கைகளை ஆராய்வதால் முழுமை பெறுகின்றன. அவ்வகையில், பண்டைய ஐந்தினைக் குடிகளின் நம்பிக்கைகளை மானுட நோக்கோடு ஆய்வு செய்யப்படுகிறது.

நம்பிக்கை மனித எண்ணங்களின் கட்டமைப்பு எனலாம். தன் மனதில் எழும் எண்ணற்ற படிமங்களின் வழியே நம்பிக்கை உருவாகிறது. அந்நம்பிக்கை

உறுதிப்பொருள். உளவியல் நோக்கு, அடிபப்படையிலும் தோற்றும் பெறுகின்றது. இவற்றுள் பண்டைய கால மக்கள் அணங்கு, சிறுதெய்வம், கொற்றவை, சூர் எனப் பிரித்தனர். இயற்கையின் பல்வேறு மாறுபாடுகளின் வழியே இத்தகைய நம்பிக்கைகள் உருவாக்கப்படுகின்றன.

இயற்கைப் பொருட்களிலும் பௌதீகப் பொருட்களிலும் உறைந்துள்ள ஆவிகள் ஆற்றல் மிகுந்தவை, அவையே மனித வாழ்வுக்குக் காரணமாக அமைகின்றன என தொல் பழங்கால மக்கள் நம்பிய ஆவிகளை வழிபட்டனர், இந்த ஆவி வழிபாடே (Animism) சமயத்தின் தோற்றுவாய் என இங்கிலாந்து நாட்டு மானுடவியல் அறிஞர் எட்வர்ட் பர்மட் டைலர் முன்மொழிந்தார். பௌதிகப் பொருட்களில் எப்போதாவது வந்து தற்காலிகமாக சிலகாலம் உறைந்து ஊக்கப்படுத்தும் உயிர்ப்பாற்றலை மக்கள் வழிபட்டனர் என்று ஆர்.ஆர். மாரட் என்பவர் கூறுகிறார்.

மெலனீஷியா, பாலினீஷயா போன்ற தீவுக்கூட்டங்களில் வாழும் தொல்குடிகள் உயிர்ப்பாற்றல் வழிபாட்டினைக் கொண்டிருந்தனர். இந்த உயிர்ப்பாற்றலை மொலனீஷியர்கள் மனா (Mana) என்றும் வட அமெரிக்காவின் அல்காங்கியன் தொல்குடியினர் மனிட்டோ (ManitoU) என்றும் சியோவன் தொல்குடியினர் வகண்ட (Wakanda) என்றும் இரோகுவாய்ஸ் எனும் அமெரிக்க இந்தியர் ஓரண்டா (Orenda) என்றும் அழைக்கின்றனர். பண்டைய தமிழர்கள் அணங்கு, சூர் என்றனர்.

சமூகத்தில் சமயமானது புனிதம் (Sacred), புனிதமற்றது (Profance) என்ற வேறுபாட்டை உருவாக்கியது என்றும் இந்த விழைவின் தொடக்க நிலை வடிவமாக குலக்குறி ஏற்பட்டது என்கிறார் துர்க்ஹைம். தொல்சமயம் எதிலிருந்து முதன்முதலில் தோன்றியது என்னும் முக்கியக் கோட்பாடு முன்வைக்கப்பட்டது. இயற்கையின் பேராற்றலைக்கொண்டு விளங்கும் ஞாயிறு. திங்கள், மலை, ஆறு, மரம், புயல், கடல், மழை முதலிய இன்னும் பல இயற்கைக் கூறுகள் மனித வாழ்வை நிர்ணயிப்பதில் வல்லமை படைத்தவை என்ற நம்பிக்கையில் இருந்து தொல்சமயம் தோன்றியது என்று மேக்ஸ் முல்லர் முன்மொழிந்தார். பண்டைய எகிப்தில் கிடைத்த தொல்லியல் சான்றுகளுடன் பிற பகுதிகளில் கிடைத்த தரவுகளோடு மேக்ஸ் முல்லர் தன் கோட்பாட்டை முன்வைத்தார்.

அறிஞர்கள் பலரும் தாம் ஆய்வு செய்த கால்த்தில், களத்தில் கண்ட தரவுகளை முன்வைத்துத் தத்தம் கோட்பாடுகளை முன்மொழிந்தனர். ஒவ்வொருவரும் தேர்ந்தெடுத்த நிலப்பகுதியில் தொல்குடிகள் பின்பற்றிய சமய நம்பிக்கைகளை முன்வைத்துக் கோட்பாடுகளை உருவாக்கினார்கள்.

பண்டைய காலம் முதல் மனிதன் இயற்கையோடு இணைந்தே வாழ்ந்து வருகின்றான். இயற்கை மாறுதலுக்கேற்ப மனித மனமும் மாறுபட்ட நிலையை அடைகின்றன. இயற்கையுடன் சமுதாய வரலாற்றை ஆராயும்போது இவ்வுண்மை புலனாகும்.

தொல்காப்பியத்திலே நாளும் புள்ளும் பிறவற்றினிமித்தமும் என்று பொருளதிகாரம் குறிப்பிட்டுள்ளது. இங்கு புள் எனக் குறிக்கப்படுவது, முன்னர்

பறவையையும் பிற்காலத்தே சகுனங்களையும் குறிப்பதாக அமைந்துள்ளது. வாய்ப்புள் எனக் குறிப்பிடுவதனால் இதனை அறியலாம்.

கூகை அலறினால் இறப்புச் செய்தி வருமென்று பண்டைத்தமிழர் நம்பினர். இந்நம்பிக்கை தமிழகத்தின் இன்றளவும் நிலவி வருகிறது. இதனை புறநானூறு சான்றளிக்கின்றது.

'அஞ்சுவரு குராஅல் குரலுந் தூற்றும்' புறம் 28

அணங்கு, சூர், பேய் பேய்மகள், சூரர மகளிர், கூளி, கழுது போன்றவை நண்பகலிலும் நள்ளிரவிலும் அச்சத்தை ஏற்படுத்தின். பேய்கள் பல்வேறு கோணங்களில் உருவகப்படுத்தப்பட்டன. புண்பட்டவர்களின் காயங்களின் வழியாக இரத்தத்தை உறிஞ்சி உயிரைப் பறிப்பவை என்பதால், போர்க்களத்தில் வெட்டுக்காயங்கள் பட்டுத் துன்புறும் வீரர்களை இவை அணுகாமலிருக்க ஐயவி புகைத்து எருக்கம் தழையுடன் வேப்பிலையும் மனையில் செருகி, காஞ்சிப் பண் பாடி பேய்களை விரட்டியுள்ளனர். இதனை,

'தீம் கனி இரவமொடு மேம்பு மனைச் செரீஇ,
வாங்கு மருப்பு யாழொடு பல் இயம் கறங்க,
கை பயப் பெயர்த்து மை இழுது இழுகி
ஐயவி சிதறி, ஆம்பல் ஊதி
இசைமணி எறிந்து, காஞ்சி பாடி
காக்கம் வம்மோ – காதல் அம்தோழி!
மேந்துறு விழுமம் தாங்கிய
பூம் பொறிக் கழற் கால் நெடுந்தகை புண்ணே'

எனும் புறப்பாடல் சான்றளிக்கிறது. இக்கருத்தினைப் புறம் 296 ஆம் பாடலும் வலியுறுத்துகின்றது.

எமன், கூற்றுவன், காலன் ஆகியவை உயிரைப்பறிப்பவையாக நம்பினர். அவற்றை எண்ணி அஞ்சி நடுங்கி தற்காத்துக்கொள்ள முயன்றனர். உயிர் பற்றப் படுவதற்குக் காலனும் உரிய காலம் பார்த்திருப்பான் என்று நம்பினர் என்பதைப் புறம் 42ஆம் பாடல் குறிப்பிடுகிறது.

பிளந்தது பேன்ற வாயினை உடைய கூகை செத்தோரை அழைக்கும் என்ற நம்பிக்கையும் பண்டையோர் கொண்டிருந்தனர்.

'மொத்த அறையுள் போழ் வாய்க் கூகை
சுட்டுக் குவி எனச் செத்தோர்ப் பயிரும்' (புறம் 240)

பேயினை விரட்டப் பல வழிமுறைகள் உண்டு. அவற்றை எளிதில் விரட்டி விடலாம் என்ற நம்பிக்கையை உடைய குடிகள், எமனை எளிதில் விரட்ட முடியாது என்றும் நம்பினர். வெண்சிறு கடுகைப் புகைத்தாலும், காவல் செய்தாலும், அமைதியடையாமல் புறத்தே நின்று உயிரைக் கொல்லும் எமன் என்பதை,

‘ஐயவி புகைப்பவும் தாங்காது. ஒய்யென

உறுமுறை மரபின் புறம் நின்று உய்க்கும்

கூற்றுத்து அணையை’

எனப் புறப்பாட்டுச் சுட்டுகிறது.

பழந்தமிழர் வெண்சிறு கடுகின் புகைக்குத் தீயவை விலகும், புண்பட்டோரிடமும், பிறந்த குழந்தையிடமும் பேய் அண்டாது எனக் கருதினர்.

**கொற்றவை வழிபாடு**

பண்டைத் தமிழரின் உயிர்ப்பாற்றல் நம்பிக்கை விரிவானது. ஒரு சமூகத்தின் வாழ்வும் அனுபவமும் வெவ்வேறு புவியியல் கூறுகளுடன் இணைந்து தொடரும்போது இத்தகையான கருத்துக்கள் உருவாக முடியும்.

பழந்தமிழர் ஐம்பூதங்களின் ஆற்றலை வணங்கினர். இவ்வாற்றலே பிற்காலத்தில் தெய்வங்களாக உருவகப்படுத்தப்பட்டன. இவற்றுள் காளி என்றழைக்கப்படும் கொற்றவையை வணங்கினால் நன்மை செய்யும், ஒதுக்கினால் கோபம் கொள்ளும் என்ற இரு கொள்கையினை உடையதாகும். காளி என்னும் சொல் திராவிட மூலத்தைக் கொண்டதாகும் என்று பொன்.கோதண்டராமன் குறிப்பிடுகின்றார்.

சங்க இலக்கியப் பாடல்களில் நானிலத் தெய்வங்களாக மாயோன், சேயோன், வேந்தன் ஆகியோரை வழிபாடு செய்தனர். வீரர்க்கு வெற்றி விளைவிக்கும் கொற்றவை வழிபாடும் அக்காலத்தில் நிலவியது. கொற்றவை வழிபாடு பற்றிப் பரவலாகக் கூறப்பட்டுள்ளது. குறுந்தொகையில் சடங்குகளோடு கொற்றவை வழிபாடு செய்யப்பட்ட செய்தி கூறப்பட்டுள்ளது.

‘விடர்முகை அடுக்கத்து விறல்கெழு சூலிக்குக்

கடனும் பூணாம் கைந்நூல் யாவாம்

புள்ளளும் ஓராம் விரிச்சியும் நில்லாம்

உள்ளளும் உள்ளாம் அன்றே, தோழி

உயிர்க்கு உயிரன்னர் ஆகலின் நம்வயின்

இமைப்புவரை அமையா நம்வயின்

மறந்து ஆண்டு அமைதல் வல்லியோர் மாட்டே’ குறுந்தொகை 218

தோழியை நோக்கித் தலைவி கூறுவதாக அமைந்துள்ள இப்பாடலில் ஒருகண நேரமும் கூட அவரைப் பிரிந்து வாழ முடியாத நம்மை மறந்து இருக்கின்ற அவர் அழுத்தமான மனமுடையவர், அவர் நமது உயிருக்கு உயிர் போன்றவர். எனவே நமது நிலையை உணர்ந்து விரைவில் நம்மோடு வந்து சேரும் கட்டுப்பாடு உடைவர். அப்படி அவர் செய்யார் எனின் நாம் கடவுளை வழிபாட்டு பயன் என்ன? என்று தலைவி கூறுகின்றாள். கடவுளை வழிபாடு செய்த பிறகு தலைவர் வருதலைவிட நம் அன்பு நிலையை உணர்ந்து அவரே வருதல்தான் அவருக்குக் கடமை என்னும் கருத்துடைய பாடலில் சங்ககாலச் சமுதாயத்தில் நிலவிய சில வழிபாட்டு முறைகள் சுட்டப்பட்டுள்ளன.

நேர்த்திக் கடன் அல்லது பலிக்கடன் கழித்தல் என்னும் சடங்கு விறல்கெழு சூலிக்குக் கடனும் பூணாம் என வரும் தொடரால் குறிக்கப் பெறுகின்றது. பிரிந்த தலைவர் மீண்டு வந்தாரெனில், தன்னைவிட்டுப் பிரியாமல் வாழ்ந்திட வேண்டுமென்று வேண்டிக்கொள்வதும், பின்னர் அவ்வேண்டுதலை நிறைவேற்றுவதும் மக்கள் வழக்கமாக இருந்ததை அறியலாம். முருகனையும் இவ்வாறு இவ்வாறு வழிபாடும் முறை இருந்தது. என்பதை

'கெழீஇக் கேளிர் சுற்ற நின்னை
எழீஇப் பாடும் பாட்டமர்ந் தோயே'

என்னும் பரிபாடல் (14) மூலம் உணராம். பிரிந்த கேளிர் வந்து புணர்ந்து பின் நீங்காமை பொருட்டு மகளிர் யாழை எழுவி நின்னைப் பாடுகின்ற பாட்டை விருப்பினோய் என்று இப்பாடல் வரிகளுக்கு பரிமேலழகர் எழுதியுள்ள உரையும் முற்சுட்டிய கருத்துக்கு அரணாக அமைகிறது.

சங்க காலத்தின் இறுதியில் வைதிக சமயத்தின் தாக்கம் பண்டைய வழிபாட்டில் பல நிலைகளில் மாற்றத்தை உருவாக்கியிருக்கிறது. வைதிக தெய்வங்களை அறிமுகப்படுத்தியது. வழிபாட்டுக்கு இந்திரன் முற்பட்ட காலத்தில் வழிபாட்டுக் கூறுகளான தெங்வங்கள் நடுகல் வழிபாடு, சதிக்கல் வழிபாடு போன்றவை பொது வழிபாடாக மாறின.

பண்டைக்குடிகளின் எண்ணிலடங்காத நம்பிக்கைகள் சங்கப்பாடல்களில் இடம் பெற்றுள்ளன.